புதுச்சேரி அரசு - போக்குவரத்துத் துறை

எண்: 04/TD/DTC/PA/2014/29

புதுச்சேரி, தேதி: 17.11.2014

செய்திக் குறிப்பு

## புதுவையின் முழுமையான போக்குவரத்துத் திட்ட ஆய்வுப்பணி தொடக்கம் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன

புதுவை யூனியன் பிரதேசமானது நம் நாட்டின் ஐந்தாவது நகரமயமான பகுதியாகும். மாநில வாகனப் பதிவேட்டின்படி இங்கு 8.34 லட்சம் வாகனங்கள் 31.10.2014வரை பதிவு செய்யப்பட்டுள்ளன. புதுவையில் கட்டமைப்பால் கவரப்படும் மக்கள் பலரின் குடியேற்றத்தால் இங்கே வாகன மற்றும் போக்குவரத்து நெரிசல் அதிகமாகியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60000 வாகனங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. வாகன எண்ணிக்கை அதிகமானதால், நகரமயமான புதுச்சேரியின் சாலையில் செல்லும் வாகனங்களின் சராசரி வேகம் மணிக்கு 12 கி.மீ. மட்டுமே.

பொது மக்கள் விருப்பத்துடன் பயன்படுத்தும் வகையில் புதுச்சேரியின் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தைத் திட்டமிட்டு மேம்படுத்தி பாதுகாப்புமிக்க, எளிமையான பயணத்தை உறுதி செய்யும் முகமாக புதுவை அரசானது புதுவைக்கான எதிர்கால போக்குவரத்துத் திட்டத்திற்காக மத்திய நகர்புற மேம்பாட்டு அமைச்சக நெறிகளின்படி முழுமையான ஆய்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளது. புதுவை அரசின் ஆணைப்படி, டெல்லி ஒருங்கிணைந்த பல்நோக்கு போக்குவரத்து மாதிரித்திட்ட அமைப்பு (Delhi Integrated Multi-Modal Transit System Ltd. (DIMTS) என்ற டெல்லி அரசின் நிறுவனத்திடம் புதுவைக்கான முழுமையான போக்குவரத்து திட்ட ஆய்வுப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிறுவனம் தனது பணியினைத் தொடங்கிவிட்டது. பொதுமக்கள் தங்களை நாடி வரும் களப்பணியாளர்களுக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் தெரிவித்து புதுவைக்கான முழுமையான போக்குவரத்துத் திட்ட ஆய்வுப்பணியினை மேற்கொள்ள பொது மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

பொது மக்கள் புதுச்சேரியின் போக்குவரத்து மேம்படுத்துதல் குறித்த கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் புதுவைக்கான முழுமையான போக்குவரத்து திட்ட ஆய்வுப் பணியில் கருத்தில் கொள்ளப்படும். அனைத்து தரப்பு மக்களின் விரைவான மற்றும் எளிதான போக்குவரத்திற்கான மேலான ஆக்கபூர்வமான கருத்துக்களை எழுத்துமூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு 03.12.2014க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்து ஆணையர்,
போக்குவரத்துத் துறை,
100அடி ரோடு, முதலியார்பேட்டை,
புதுச்சேரி - 605 004.

மின் அஞ்சல் மூலமாக கருத்துக்கள் மற்றும் அரிய ஆலோசனைகள் வழங்க விரும்புவோர் tc.pon@nic.in என்ற முகவரிக்கு தெரிவிக்கலாம்.

GOVT. OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்